தேதி ஜனவரி 10, 2014

<u>நிர்வாகத்துக்கான பா.ஜ.க.வின் திட்டத்தை அறிந்துகொள்ள நாடு காத்திருக்கிறது</u>

- **அருண் ஜேட்லி**
- **மாநிலங்களவை எதிர்கட்சித் தலைவர்**

நான்கு மாநிலங்களில் நடைபெற்ற தேர்தல் முடிவுகள் வெளியாகி ஒரு மாதம் கடந்துவிட்டது. அதிலிருந்து தேசிய அரசியலில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டு வருகிறது.

2013-ஆம் ஆண்டு செப்டம்பர் 13 –ஆம் தேதி நரேந்திர மோடி பா.ஜ.க.வின் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்படுவதற்கு முன் பா.ஜ.க.வால் பிரதமர் வேட்பாளராக யாரையாவது அறிவிக்க முடியுமா என்ற சந்தேகம் எழுப்பப்பட்டு வந்தது. நரேந்திர மோடியை பிரதமர் வேட்பாளராக அறிவித்த பின் அவருக்கு பிரம்மாண்டமான ஆதரவு திரண்டதை நாடே கண்டது. கட்சித் தொண்டர்களும் ஆதரவாளர்களும் உற்சாகம் அடைந்தனர். பிரதமர் வேட்பாளராக இவருடைய தனிப்பட்ட ஆதரவு விகிதம் பெரிய ரெகார்ட்டை ஏற்படுத்தியது. 2013 டிசம்பர் 8-ஆம் தேதி வெளி வந்த சட்ட மன்றத் தேர்தல் முடிவுகள் மோடி எதிர் ராகுல் என்ற விவாதங்களை அர்த்தமற்றதாக்கியது. மோடியும் பா.ஜ.க.வும் உறுதியான இடத்தில் இருப்பதை தேர்தல்கள் சுட்டிக்காட்டின. தில்லி சட்ட மன்றத் தேர்தல் முடிவுகள் ஆம் ஆத்மி கட்சி ஒரு புதிய சவாலாக எழுச்சி பெற்றுள்ளது என்பதைக் காட்டியது. சென்ற மாதம் ஆம் ஆத்மி கட்சி ஊடகங்களில் மக்களின் மனதிலும் நிறைய இடம் பிடித்தது. இந்தக் கட்சி எதிர்வினையால் உருவான கட்சி. அரசியலில் நம்பிக்கை கொண்டிருந்த, இதுவரை எந்தக் கட்சியுடனும் சாராமல் தனியாக தேர்தல்களை எதிர்கொண்டவர்கள் போட்டிப் போட்டுக்கொண்டு இதில் இணைந்தனர். இவர்களில் சிலர் அவர்கள் பெற்ற ஓட்டுகளைவிட அதிக ஊடக ஆதரவைப் பெற்றனர். இன்று, அவர்கள் தங்கள் லட்சியங்களுக்கான ஒரு களம் கிடைத்துவிட்டதாக உணர்கின்றனர்.

தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு ஆம் ஆத்மி கட்சியின் தில்லி அரசாங்கத்தின் செயல்பாடுகள் அந்தளவு பிரமாதமாக இல்லை. தில்லியை உலகத்தின் சிறந்த நகரமாக மாற்றுவதற்கான எந்த திட்டமும் இதனிடம் இல்லை. இந்தக் கட்சி அமைச்சர் எந்த வண்டியில் பயணம் செய்கிறார், எந்த வீட்டில் இவர்கள் குடியிருக்கிறார்கள், என்னென்ன இலவசங்களை விநியோகிக்கலாம் மக்களை எப்படி கைக்குள் போட்டுக்கொள்வது போன்ற இந்த மாதிரியான ஊடகங்களைக் கவரும் நடவடிக்கைகள்தான் இதுவரை தில்லியில் இவர்களுடைய செயல்பாடுகள். இவற்றில் சில முக்கியமானவையாக இருக்கலாம் ஆனால், சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரத்தை இவை மேம்படுத்தாது. இந்த தந்திரங்கள் எல்லாம் நீண்ட கால தாக்கங்களை ஏற்படுத்தாது. ஆனால், குறைந்தபட்சம் தற்காலிகமாகவாவது நாட்டின் பல பகுதிகளில் புதிய ஒரு அமைப்பு உருவாவதற்கான இடைவெளி இருக்கத்தான் செய்கிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

ஊழல் திட்டத்தை மாற்றுவதற்கு ஆம் ஆத்மி கட்சி முயன்று வருகிறது. காங்கிரஸ் கட்சியை தர்மசங்கடப்படுத்தும் எந்த விதமான ஊழல் குற்றச்சாட்டுகளும் இதில் இடம்பெறவில்லை. காமன் வெல்த் விளையாட்டி போட்டிகள் முறைகேடு, 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல், நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு ஊழல் அல்லது ஷீலா தீக்ஷித் அரசின் முறைகேடுகள் போன்ற இமாலய

ஊழல்கள் எதுவுமே இதில் குறிப்பிடப்படவில்லை. வெறும் சின்னச் சின்ன ஊழல்களை குறிப்பிட்டு மக்களை திசை திருப்பப் பார்க்கிறது.

மிகவும் குறைவான மாதிரியையுடனும் வரையறைக்குட்பட்ட வகுப்பினரிடமும் ஒரு முன்னணி செய்தித்தாள் உத்தேச தேர்தல் நடத்தியது. இந்த தேர்தல் மூன்று செய்திகளைக் கூறுகின்றன. மிகவும் முக்கியமான செய்தி, வரும் நாடாளுமன்றத் தேர்தல்களில் காங்கிரஸ் தூக்கி எறியப்பட உள்ளது. இரண்டாவது செய்தி, ஆம் ஆத்மி கட்சி தனது இருப்பை அழுத்தமாக உணர்த்தப் போகிறது. மூன்றாவது செய்து, பிரதமர் வேட்பாளராக மோடி தேர்ந்தெடுக்கப்பட்டது தேசிய அளவில் அவர் ஏற்றுக்கொள்ளப்படுவதன் திசையில் பல மைல் தூரத்தில் உள்ளது.

தன் ஆதாயங்களை ஒன்றிணைப்பதுதான் பா.ஜ.க.விற்கு முன் உள்ள சவால். இதன் வேட்பாளர்களும் இந்தக் கட்சியும் தங்களது நம்பகத்தன்மை மூலம் மக்களின் நம்பிக்கையை பெற வேண்டும். காங்கிரஸ் களத்திலிருந்து ஓரம் கட்டப்படும் நிலையில், களத்தில் முன்னணியில் இருக்கப்போவது பா.ஜ.க.தான். இது தனது செயல்பாடுகளின் வேகத்தை அதிகரித்து எல்லா இடங்களிலும் ஊடுருவ வேண்டும். ‘பிரதமர் பதவிக்கு மோடி’ என்ற பிரச்சாரம் ‘இந்தியாவுக்கான திட்டம்’ என்பதுடன் சேர்க்கப்பட வேண்டும். இந்தத் யோசனை குறிப்பாகவும், தெளிவாகவும் மிகப் பெரிய திட்டங்களை உள்ளடக்கியதாகவும் இருக்க வேண்டும். மிகப் பெரிய திட்டங்கள் வெறும் சிறிய ஊழல்களில் மட்டுமே கவனம் செலுத்தும் குறுகிய மனப்பான்மை கொண்ட  பூது கட்சிகளை மங்கச் செய்யும் திறனுடையவை. அண்மைக் காலங்களில் காங்கிரசின் பயணம் ஆணவத்திலிருந்து அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இதுவரை காங்கிரஸ் பிரதமர் வேட்பாளரின் தர மதிப்பீடு இவ்வளவு குறைவாக இருந்ததேயில்லை. காங்கிரசின் மூத்த தலைவர்கள் விரக்தியுற்ற நிலையில் உள்ளனர். ஆம் ஆத்மி கட்சியை தூக்கி நிறுத்தும் இதன் உத்தி, தில்லியில் காங்கிரஸ் இடத்தை ஆம் ஆத்மி கட்சி பெறுவதற்கே வழிவகுத்தது. நாடாளுமன்றத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சியை மேம்படுத்த எந்த மாநிலமும் இப்போது இல்லை. இறுதியாக காங்கிரஸ் பெறப்போகும் வோட்டுகள் விகிதங்கள் அதிர்ச்சியூட்டும் விதமாக அதள பாதாளத்தைத் தொடலாம்.

பா.ஜ.க.விற்கு எதிரான ஆர்வலர்கள் உள்ள தொகுதி மக்கள் காங்கிரஸ் மீது தங்கள் நம்பிக்கையை இழந்துவிட்டனர். இவர்கள் ஒரு புதிய அமைப்பில் தங்களது கவனத்தை செலுத்தத் தொடங்கிவிட்டனர். காங்கிரசின் வீழ்ச்சியால் பலனடையப்போவது யார்? பா.ஜ.க.விற்கு இது ஒரு அரிதான சந்தர்ப்பம், இதை நழுவ விடவகூடாது. நரேந்திர மோடி மூலம் பாஜ.க.வுக்கு மிகவும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய பிரதமர் வேட்பாளர் கிடைத்திருக்கிறார். இப்போது இந்தக் கட்சியும் அதன் தலைவரும் இந்தியாவுக்கு அதனுடைய எதிர்காலத்திற்கான மிகப் பெரிய திட்டத்தை அறிவிக்க வேண்டும்.